பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 127

புதன்கிழமை
02 ஏப்ரல் 2025

பங்குனி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

இந்தியாவுடனான ஒப்பந்தங்களை உடனடியாக பகிரங்கப்படுத்துக

» 05

# அநீதிகள் காரணமாகவே ஆயுதம் ஏந்தினர் புலிகள்

*மீண்டும் அவ்வாறு ஏற்படக்கூடாது*
*நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு*



**கொழும்பு, ஏப்ரல் 2**

**பல வருடங்களாகத் தொடர்ச்சியாக இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாகவே, வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். எனவே, மீண்டும் அவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு இடம் கொடுக்காத வகையில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

☞ 15

## செம்மணி அகழ்வாய்வுக்கு நிதி விடுவிக்கப்படவில்லை

*நீதிமன்றத்தில் தகவல்*

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் மனித என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் மேலதிக அகழ்வாய்வை மேற்கொள்வதற்கு நிதி விடுவிக்கப்படவில்லை என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதி

☞ 15

## ஐந்தாண்டுக்குள் அரசியலமைப்பு!

கொழும்பு, ஏப். 2
புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான கால எல்லையை என்னால் சரியாகக் குறிப்பிடமுடியாது. ஆனால் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இதற்குரிய பணி நிச்சயம் நிறைவேறும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்

☞ 15

## சிறைச்சாலை செல்ல ஒருபோதும் அஞ்சேன்

*நாமல் ராஜபக்ச தெரிவிப்பு*



கொழும்பு, ஏப். 2
எனக்கு அரசமாளிகையும், சிறைச்சாலையும் ஒன்றுதான். எனவே, சிறைச்சாலைக்குச் செல்வதற்கு அஞ்சமாட்டேன். தவறுகள் இருந்தால் விசாரணை நடத்துங்கள் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

☞ 15

## பேருந்துக் கட்டணம் ஜூலையில் உயரும்

கொழும்பு, ஏப். 2
ஜூலை மாதத்திலிருந்து பேருந்துக் கட்டணம் கணிசமாக அதிகரிக்கும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

☞ 15

*உள்ளூராட்சித் தேர்தல்*

## நிராகரிக்கப்பட்ட மனுக்கள் மீது நீதிமன்றில் நேற்று விசாரணை!

*நாளையும் தொடரும்*
*வெள்ளியன்று தீர்ப்பு?*

கொழும்பு, ஏப். 2
உள்ளூராட்சித் தேர்தலின்போது நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் மீதான ஆட்சேபனை விசாரணைகள் உயர்நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றன. இந்த மனுக்கள் மீதான தொடர்ச்சியான விசாரணைகள் நாளையதினம் இடம்பெறும் என்றும் திகதியிடப்பட்டுள்ளது.

☞ 15

## தவறான முடிவெடுத்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 2
உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய

☞ 15

## யாழ் ராணி சீரில்லை பயணிகள் அந்தரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 2
வடக்கின் பிரதான ரயில் சேவைகளுள் ஒன்றான யாழ் ராணியின், ஒழுங்கற்றதும் பலவீனமானதுமான சேவைகள் காரணமாக தாம் பாதிக்கப்படுவதாக பயணிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையிலிருந்து

☞ 15

## குளத்தில் சடலம் மீட்பு

வவுனியா, ஏப். 2
வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, நெளுக்குளம் நேரியகுளம் பிரதான வீதியிலுள்ள தம்பனை புளியங்குளம் குளக்கரைக்கு அண்மித்த பகுதியில்

☞ 15

*உயர்நீதிமன்ற வழக்கையடுத்து*

## யாழ். பல்கலை மாணவர் மீதான விசாரணைச் செயன்முறை நீக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 4 ஆம் வருட சட்டத்துறை மாணவர் ஒருவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த வகுப்புத்தடை உத்தரவு மீளப்பெறப் பட்டிருந்த நிலையில், தற்போது விசார

☞ 15




'கோதாரியில விழுந்த கோச்சி கூட எங்களோடதான் கோவிக்குது கண்டியளோ'

*சட்டவிரோத மீன்பிடி*

## கட்டைக்காட்டில் இருவர் கைது!



யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
வெற்றிலைக்கேணிக் கடற்படையினர் நேற்று அதிகாலை

☞ 15

## யாழ். பல்கலையில் பகிடிவதை 4 மாணவர்களுக்கு வகுப்புத்தடை

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட புதுமுக மாணவர் ஒருவர் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு இரண்டாம் வருட சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் தெரிவித்துள்ளார்.
நாத்தாண்டிய

☞ 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 01.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4035
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 34 53 63 65
விசே. எழுத்து T

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 01.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1102
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 01 21 24 25

**NLB ஜய**
திகதி 01.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0061
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 4 2 0 9

**மெகா பவர்**
திகதி 31.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2141
ஆங்கில எழுத்து P
சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கங்கள் 02 10 41 61

**மஹஜன சம்பத**
திகதி 01.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5793
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 3 6 3 4 6 0

**தன நிதானய**
திகதி 01.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1823
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 32 47 51 61
விசேட எழுத்து R

**அத சம்பத**
திகதி 01.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0368
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 3 4 6 0

# ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தை அரசியலாக்குகிறது அரசாங்கம்

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

**கொழும்பு, ஏப்.2**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முற்படுகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பின் விவரம் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் வெளியிடப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையிலேயே நாமல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் எம்மிடம் வினவியோ அல்லது ஊடகங்கள் முன்வந்து கருத்து வெளியிட்டோ பலன் இல்லை.

தற்போதைய ஆட்சியில் பொலிஸில் உயர்பதவியொன்று வழங்கப்பட்டுள்ள நபரே உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் சம்பவத்தின்போது சி.ஐ.டி. பிரதானியாக இருந்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ளவரும் பிரதானியாக இருந்தார். இவர்கள் இருவரிடமும் வினவலாம். தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவரின் மகன்மார் இருவரே தற்கொலை குண்டுதாரிகள். எனவே ஒரு கட்சியாக இதுதொடர்பில் தேசிய மக்கள் சக்தி எடுத்த நடவடிக்கை என்ன? தமது தரப்பில் தவறு உள்ளதால் சில அதிகாரிகள் அரசியல் அடைக்கலம் தேடியுள்ளனர். கடந்த கால அரசாங்கங்கள்மீது பழிபோட்டுவிட்டு அவர்களை அரசாங்கம் பாதுகாக்கின்றது-என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**
திகதி 01.04.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0501
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 8 8 8 3 6 8

**Super Ball DLB**
திகதி 01.04.2025 தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2767
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 35 42 47 54

**சனிதா DLB**
திகதி 01.04.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம் 06 52 58 72
வெற்றி வாரம் 4928

**SASIRI DLB**
திகதி 01.04.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0655
வெற்றி இலக்கம் 09 22 23

**லக்ன ராசி DLB**
திகதி 01.04.2025 தினம் செவ்வாய்க்கிழமை
கும்பம்
வெற்றி இலக்கம் 06 17 22 46
சீட்டிழுப்பு வாரம் 4479

**KAPRUKA DLB**
திகதி 01.04.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கம் 07 15 42 53
வெற்றி வாரம் 1943

**அத கோடிபதி DLB**
திகதி 01.04.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 13 30 62 65
வெற்றி வாரம் 2593

# சுகாதார சேவைகளில் செயற்கை நுண்ணறிவு

## அமைச்சர் நளிந்த தகவல்

கொழும்பு, ஏப்.2

சுகாதார சேவைகளின் செயற்றிறனை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கக்கூடிய ஒரு முன்னோடித் திட்டம் அவசியம் என்று வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஒரு வலுவான சுகாதார அமைப்பு ஒரு வளமான தேசத்தின் அடித்தளம் என்பதை தற்போதைய அரசாங்கம் அங்கீகரிக்கிறது. வரவு- செலவுத்திட்டத்தில் தற்போதைய அரசாங்கம் சுகாதார சேவைக்காக பெரிய தொகையை ஒதுக்கியுள்ளது.

ஆரம்ப சுகாதார சேவையின் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார நிறுவனங்களின் மூலம் நோயாளர் நெரிசலைக் குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கமைய நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதே சுகாதார அமைச்சின் முதன்மையான நோக்கமாகும்.

சாதாரண நிர்வாக முறைகளை உயர் தொழில்நுட்ப மேலாண்மை நிலைக்கு உயர்த்த செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். எதிர்வரும் நாள்களில் சுகாதார சேவைகளின் செயற்றிறனை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கக்கூடிய ஒரு முன்னோடித் திட்டம் அவசியம் - என்றார். (எ-இ)

# மல்கம் ரஞ்சித்துக்கு அஞ்சியே அவசரப்படுகிறார் அநுரகுமார

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.2

அரசாங்கத்துக்கு எதிராக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வீதிக்கு இறக்குவதைத் தடுக்கவே ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் உண்மை வெளிப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். உண்மையை வெளிப்படுத்த சுபநேரம் பார்க்கவேண்டுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை இந்த மாதம் 21ஆம் திகதிக்கு முன் பகிரங்கப்படுத்தாவிட்டால் அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்குவோம் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித்திருந்தார். அதனாலேயே உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் உண்மை வெளிப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார் -என்றார். (எ-இ)

# புத்தாண்டையொட்டி விசேட பஸ் சேவை!

கொழும்பு, ஏப். 2

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட பஸ் சேவையை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 500 மேலதிக பஸ்களை இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். பின்னர், மக்கள் மீண்டும் திரும்புவதற்காக ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை விசேட பஸ் சேவை முன்னெடுக்கப்படும் என இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

# மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க உதவியாளருடன் செல்ல அனுமதி

கொழும்பு, ஏப்.2

விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்வது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது வாக்குச்சீட்டை அடையாளமிடுவதற்கு வாக்கெடுப்பு நிலையத்துக்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச்செல்லமுடியும். அந்த நபர் 18 வயதைப் பூர்த்திசெய்தவராக இருக்க வேண்டும் என்பதுடன், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக இருக்கக்கூடாது. தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியற்கட்சி ஒன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ, வாக்கெடுப்பு நிலையத்தின் முகவராகவோ இருக்கக்கூடாது.

விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது உதவியாளர்களை உடன் அழைத்துச்செல்ல தகுதி சான்றிதழ் ஒன்றை உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளத் தேவையான விண்ணப்பங்களை கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யமுடியும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் திருத்தம் தொடர்பில் பேசுவது அவசியமில்லாதது!

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 3**

**அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமற்றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிரந்தளித்தால் தேவையில்லாத முரண்பாடுகள் தோற்றம் பெறும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி எதிர்வரும் நான்காம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணத்தின்போது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே புதிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதமர் மோடியின் இலங்கைக்கான பயணம் மிகவும் நல்லது. மோடியின் பயணத்தின் மூலம் இலங்கை பல நன்மைகளைப் பெறும். ஜனாதிபதி அநுரவும், அவருடைய குழுவினரும் எதிர்க்கட்சியில் இருந்தபோது, இந்தியாவுக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அப்படி நாங்கள் செயற்படப்போவதில்லை. ஏனென்றால், உலக நடப்பு என்னவென்று எங்களுக்குத் தெரியும். ஆனால், இலங்கையின் இறைமையை இந்தியாவிடம் பணயம் வைக்கும் வகையிலான ஒப்பந்தங்களில் அரசாங்கம் ஈடுபடக்கூடாது. இந்த விடயத்தை நாங்கள் மிகவும் நுணுக்கமாகக் கண்காணிப்போம் - என்றார். (ம)

*பண்டிகைக்காலத்தில்*

# பாதுகாப்புக்கடமையில் 6,000 பொலிஸார்

கொழும்பு, ஏப். 2

எதிர்வரும் பண்டிகைக்காலத்தில் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்காக சுமார் 6 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவார்கள். பொலிஸாருக்கு மேலதிகமாக, இலங்கை இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப்படை ஆகியவற்றின் பணியாளர்களும் பாதுகாப்பைப் பராமரிப்பதில் உதவுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஓட்டோக் கட்டணம் மாற்றமில்லை!

கொழும்பு, ஏப். 2

எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டபோதிலும், முச்சக்கரவண்டிக் கட்டணங்களைக் குறைக்கப்போவதில்லை என்று முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. பெற்றோல் விலை 10 ரூபா குறைக்கப்பட்டதால், முச்சக்கரவண்டிக் கட்டணத்தைக் குறைப்பது நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மில்கோ உற்பத்திகள் விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 2

மில்கோ நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் திரவப் பாற்பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக மில்கோ நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை முகாமையாளர் சம்பத் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, முன்னர் 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஹைலண்ட் யோக்கட் ஒன்றின் விலை 70 ரூபாவாகவும் முன்னதாக 225 ரூபாவுக்கு விற்கப்பட்ட 450 மில்லிலீற்றர் நீண்டநாள் பயன்படுத்தக்கூடிய திரவப் பாலின் விலை 25 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 200 ரூபாவாகவும் 200 ரூபாவுக்கு விற்கப்பட்ட 450 மில்லிலீற்றர் பால் பைக்கற் 30 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 170 ரூபாவாகவும் விற்கப்படும். அத்துடன் 440 ரூபாவுக்கு விற்கப்பட்ட 900 மில்லிலீற்றர் பால் பைக்கற் 60 ரூபாவால் குறைக்கப்பட்டு 380 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



*தமிழரசுக்கட்சி*

# வேட்பாளர் வீட்டின் மீது பெற்றோல் குண்டுவீச்சு

மட்டக்களப்பு, ஏப். 2

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடைப் பகுதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வேட்பாளரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாக வீட்டிலிருந்த யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லையென வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# நிவாரணப்பொதிகள் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 2

தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தால் சலுகை விலையில் வழங்கப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் விநியோகம் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அதன்படி, 5 ஆயிரம் ரூபா [illegible] யான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதியை 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உலருணவுப் பொதிகளை நாடளாவிய ரீதியில் லங்கா சதொச விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப் [illegible] (ச-இ)




**மா**தக்கடைசியில கையில காசுதான் இருக்காதெண்டு பார்த்தால், இப்ப மாதக் கடைசியெண்டால் எல்லாப் பெற்றோல் செற்றுகளிலையும் பெற்றோல் வத்திப்போய் 'பெற்றோல் இல்லை' எண்ட போர்ட் தொங்கிறது வாடிக்கையாப் போட்டுது. இப்பிடிச் சொல்லிவைச்சமாதிரி, எல்லாப் பெற்றோல் செற்றுகளிலையும் எப்பிடி ஒரேயடியா பெற்றோல் இல்லாமல் போகும்? எண்டு சனமும் பெரிசா யோசிக்கிறேலை. உண்மையில இப்பிடி மாதக்கடைசியில பெற்றோல் இல்லாமல் போறதுக்குக் காரணம், பெற்றோலின்ர விலை குறைஞ்சிடுமோ எண்டு செற்காரர் பயப்பிடுறதுதான்.

ஒவ்வொருமாதமும் கடைசிநாளிலதான் பெற்றோல், டீசலின்ர விலை என்னெண்டு அரசாங்கம் அறிவிக்கிறது. அந்தநேரத்தில உலக சந்தையில பெற்றோலின்ர மதிப்பு எப்பிடி இருக்கெண்டு பார்த்து, அதுக்கேத்தபடி இலங்கையில என்ன விலைக்கு விக்கலாம் எண்டு கணக்குப்போட்டு, மாதக்கடைசிநாளில அதுவும் சாமத்திலதான் இந்த விலைமாற்ற அறிவிப்பு வரும். அப்பிடி சாமத்தில சொல்றதுக்கும் ஒரு காரணம் இருக்கு. முதல்நாள் பகலே இந்த விலைமாற்றம் வந்தால் என்ன நடக்கும்? விலைகுறையப்போகுதெண்டால், 'இண்டைக்கு விட்டிட்டு நாளைக்குப் பெற் றோலை அடிப்பம்' எண்டு சனங்கள் நினைக்கிறதால, பெற்றோல் செற்காரருக்கு நட்டமாப் போடும். அதைமாதிரி விலையைக் கூட்டினால், செற்காரர் பெற்றோல் இருந்தாலும், இல்லையெண்டு சொல்லி ஆக்களை திருப்பி அனுப்பிப்போட்டு, அடுத்தநாள் விலைகூடின பிறகு அதை வித்துக் கொள்ளை லாபம் பாப்பினம். இப்பிடி ரண்டு தரப்புக்கும் சிக்கல் வரக்கூடாது எண்டுதான் இந்த விலை மாற்றத்தை சாமத்தில அறிவிக்கிறவை.

ஆனால் அப்பிடி அறிவிச்சும், அதுக்கையும் தங்களுக்கு நட்டம் வராமல் செற்காரர் செய்யிற வேலையாலதான், இப்பிடி மாதக்கடைசியில செற்றுகளில பெற்றோல் இல்லாமல் போகுது. இப்ப அநேகமா பெற்றோல் விலை கூடுறேலத்தானே. அதோட இப்ப எலக்சன் காலம் எண்டபடியால குறைக்கிறதுக்குத் தானே சான்ஸ் கூட. நேற்றும் 10 ரூபாவால குறைச்சிருக்கினம். அப்பிடி விலை குறையேக்க தங்கட செற்றில இருப்பில கனக்க பெற்றோல் இருந்தால். அதால பெரிய நட்டம் வரும் எண்டிட்டு, மாதக்கடைசியில பெற்றோல், டீசலை இறக்காமல் தங்களுக்கு முதலாம் திகதிதான் தேவை எண்டு ஓர்டர் குடுக்கினமாம். அதால தான் கூடுதலான செற்றுகளில இப்பிடி மாதக்கடைசியில பெற்றோல் இல்லாமல் போகுது. அப்பிடி அடியொட்ட பெற்றோலை மாதக்கடைசியில வித்தால், அடுத்தநாள் பெற்றோல் புதுவிலையிலதான் வந்திறங்கும். அதால ஒருசதம்கூட செற்காரருக்கு நட்டம் வராதாம். ஆனால் ஆபத்து அந்தரத்துக்கு பெற்றோல் இல்லாமல் ஓடித்திரியிறவைக்குத்தான் பெரும் கஷ்டம் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். ஆனால்,புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உணவு விடயத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் உற்சாகமாகச் செய்வீர்கள். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர் களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** பொறுமை காக்கவேண்டிய நாள். சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும். உதவி கிடைப்பது இழுபறியாகும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காகப் பாடுபடவேண்டி இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**விருச்சிகம் :** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். மறைமுக எதிர்ப்பு நீங்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்ப டக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். யணத்தால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும்.

# பஞ்சாப் கிங்ஸ் தொடர் வெற்றி

## லக்னோவைத் தோற்கடித்தது



**லக்னோ, ஏப். 2**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், லக்னோவைத் தோற்கடித்து, இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்தது பஞ்சாப்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் களத்தடுப்பைத் தீர்மானித்தது. லக்னோ அணியின் ஆரம்ப வீரர்களாக மார்க்ரம் மற்றும் மிச்செல் மார்ஷ் இருவரும் களமிறங்கினார்கள். முதலாவது பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார் மிச்செல் மார்ஷ். மார்க்கம் மற்றும் நிக்கொலஸ் பூரன் இருவரும் இணைந்து இணைப்பாட்டத்தை அமைத்த போதிலும், வழக்கமான அதிரடி அவர்களுடைய இன்னிங்ஸில் இருக்கவில்லை. மார்க்ரம் 28 ஓட்டங்களுடனும், பூரன் 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள்.

அணித்தலைவர் பன்ட் வெறும் 2 ஓட்டங்களைப் பெற்றார். பதோனி மற்றும் சமட் இருவரும் அணியைச் சற்றுப் பலம்பெற வைத்தனர். பதோனி 41 ஓட்டங்களுடனும், சமட் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை லக்னோ அணி பெற்றது.

பந்துவீச்சில் அர்ஷ்டீப் சிங் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்த ஆரம்ப வீரரான ஆர்யா 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பிரப்சிம்ரன் சிங் 34 பந்துகளில் 69 ஓட்டங்களை விளாச பஞ்சாப்பின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. அணித்தலைவர் ஸ்ரேயஸ் மற்றும் வதேரா இருவரும் பலமான இணைப்பாட்டத்தை அமைக்க, 23 பந்துகள் மீதமிருக்கத்தக்கதாக 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து பஞ்சாப் கிங்ஸ் வெற்றிபெற்றது. ஸ்ரேயஸ் 52 ஓட்டங்களையும், வதேரா 43 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)




## திருவாசகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 2

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 51, பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.

" மாணிக்கவாசகரும் அச்சோப்பதிகமும் " எனும் விடயப்பொருளில் சைவப்புலவர் க. கைலநாதன் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச- 25)

## கந்தபுராணபடனத் தொடர் சுக்கிரவாரச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத் தொடர் -19 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன் 'படையெழு படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

## குருதிக்கொடை முகாம்



யாழ்ப்பாணம், ஏப். 2

சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் தமது பங்குபற்றுதலை உறுதிப்படுத்த- பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-22, 159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

மனிதர்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றுவதன் மூலம் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ளமுடியும்.

– வில்லியம் ஜேம்ஸ்–


# ஊழலை ஒழிப்பதில் பாரபட்சம் காட்டாதீர்

ஊழல் குற்றச்சாட்டுகளில் அரசியல்வாதிகள் சிலர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். கடந்த அரசாங்கங்களில் பதவிகளை வகித்த சிலர் விசாரணைகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றனர். ஆட்சியில் உள்ள தற்போதைய அரசாங்கம் ஊழல் ஒழிப்பை முதன்மைப்படுத்தி ஆட்சியைப் பிடித்திருக்கும் நிலையில் - செயற்பாட்டு ரீதியான விமர்சனங்களைச் சந்தித்திருக்கும் நிலையில் தற்போதுதான் சில கைதுகள் நடந்திருக்கின்றன. உள்ளூராட்சித் தேர்தலை நாடு எதிர்கொள்ளவுள்ள நிலையில், இவை அரசியல் நோக்கங்களுக்கான கைதுகள் என்ற விமர்சனத்தை எதிர்க்கட்சிகள் முன்வைக்கின்றன. மக்கள் பணத்தை ஏப்பமிட்ட பெருந்தலைகள் சுதந்திரமாக நடமாட, கீழ் மட்ட அரசியல்வாதிகள் இலக்கு வைக்கப்படுவதும் இந்த விமர்சனங்களுக்குக் காரணமாகவிருக்கின்றது.

இலங்கை அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக இருந்தாலும் கடந்த பல தசாப்தங்களாக அரசியல்வாதிகளின் ஊழல்கள் மற்றும் முறைகேடுகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்துதல், ஊழல் ஊடுருவிய ஒப்பந்தங்கள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் என்பன இலங்கையின் பொருளாதார -சமூக வளர்ச்சிக்குப் பெரும் தடையாக உள்ளன என்பது பரகசியமானது. கடந்த காலங்களில் பல ஊழல், முறைகேடுகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், அவற்றின் பின்னணியில் அரசியல் தலையீடுகள் காணப்பட்டிருக்கின்றன. நாட்டின் முக்கியமான அரசியல்வாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகள் தசாப்த காலத்துக்கும் மேலாக இழுபட்டுக்கொண்டிருக்கின்றன. ஊழல், முறைகேடுகள் தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டு அல்லது நிறுத்தப்பட்டு குற்றவாளிகளைக் காப்பாற்றும் வகையிலேயே கடந்தகால ஆட்சியாளர்கள் செயற்பட்டிருந்தனர்.

நாட்டில் ஊழலைத் தடுப்பதற்குப் பல சட்டங்கள், நிறுவனங்கள் இருந்தாலும் கடந்த காலங்களில்அவற்றின் செயற்றிறன் சர்ச்சைக்குரியதொன்றாகவே இருக்கின்றது. ஆட்சியில்இருப்பவர்களின்தலையீடுகளால்சட்டத்தைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தமுடியாமை மிகப்பெரிய சிக்கலாக இருந்ததுடன், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற் கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அதேநேரம், கடந்தகாலங்களில் ஊழல் குற்றச்சாட்டுகளை அரசியல் ஆயுதமாகவே ஆட்சியாளர்கள் பயன்படுத்தினர். நாட்டின் அபிவிருத்தியை கருத்திற் கொள்ளாது அரசியல் எதிரிகளை அடக்குவதற்காக மட்டுமே கைதுகள் பயன்படுத்தப்பட்டமை ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணமுடியாத நிலைமையை உருவாக்கியிருந்தது. பல தசாப்தகாலமாக நிலவும் இந்த சூழல் நாட்டில் ஊழல், முறைகேடுகள் மலியவும், நாடு பொருளாதார ரீதியில் அடிவாங்கவும் வழிவகுத்திருக்கின்றது.

இந்தநிலைமையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே நாடு ஊழல், மோசடிகளில் இருந்து மீண்டெழ முடியும். ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளை நீதிமன்றங்களில் விரைவாக நடத்தி, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது மிக முக்கியமானது. ஊழலை ஒழிக்கும் கோஷத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், கைதுகள் மூலம் பிரபல்யம் தேடும் கடந்தகால ஆட்சியாளர்களின் தந்திரத்தைக் கையாள முற்படாமல், ஊழல் மோசடிக் குற்றங்களில் ஈடுபட்ட சகலரையும் கட்சி பேதமின்றி, காய்தல் உவத்தல் இன்றி, தண்டிக்கும் நோக்குடன் செயற்பட வேண்டும். ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளை விரைவாக, அரசியல் தலையீடுகள் இன்றி முன்னெடுத்து குற்றவாளிகள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது. கைதுகள் நாட்டில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதே மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து அரசாங்கம் செயற்பட்டாலே, விமர்சனங்களை வெற்றிகொள்ளமுடியும்.




# இந்தியாவுடனான ஒப்பந்தங்கள்; பகிரங்கப்படுத்த வேண்டும்!



## ஐ.மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 2**

**இந்தியாவுடனான நட்புறவைப் பேணுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால் நாடு என்ற ரீதியில் பிறிதொரு நாட்டுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் தொடர்பில் மக்களுக்கு வெளிப்படுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது கையெழுத்திடப்படவுள்ளதாகக் கூறப்படும் ஒப்பந்தங்கள் குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் அவை தொடர்பில் நாட்டுக்கோ அல்லது நாடாளுமன்றத்துக்கோ அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. மேலும் அதானி நிறுவனம் இரத்துச் செய்துள்ள வேலைத் திட்டத்தை மீண்டும் அவர்களுக்கே வழங்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எனவே இவற்றின் உண்மைத் தன்மையை உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்துவமாறு வலியுறுத்துகின்றோம் - என்றார். (ச-இ)

# முட்டைக்கு வற்வரி

கொழும்பு, ஏப்.2

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக முட்டைகளுக்கு 18 சதவீத வற்வரி விதிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டைகளுக்கு வற்வரி நடைமுறைப்படுத்தப்பட்டாலும் முட்டை விலையில் எந்த அதிகரிப்பும் இருக்காது.

முட்டை விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம் வற்வரிக்கு உட்பட்டது எனவும், இது முட்டைத் தொழிலில் சரிவுக்கு வழிவகுக்கும் எனவும் முட்டை உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர். (ச-இ)



# மியான்மருக்கு இலங்கை சுகாதார உதவி

கொழும்பு, ஏப். 2

மியான்மரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிவழங்க மருத்துவக் குழு ஒன்றை அந்த நாட்டுக்கு அனுப்பத் தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. மியான்மர் அரசாங்கம் அனுமதியை வழங்கியவுடன், அனர்த்த மீட்புப் பணிகளில் அனுபவமுள்ள விசேட மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளடங்கிய மருத்துவ நிபுணர்கள் குழு அங்கு செல்லவுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

# வியாழேந்திரனுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப் 2

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் வியாழேந்திரனை எதிர்வரும் 8ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இலஞ்சம் பெறுவதற்கு உதவி மற்றும் ஆதரவு வழங்கியகுற்றச்சாட்டில்வியாழேந்திரன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். குறித்த வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பால் தேநீர்

## 10 ரூபாவால் உயர்வு



யாழ்ப்பாணம்,ஏப். 2

பால் தேநீர் மற்றும் பால் சார்ந்த பழச்சாறுகள், சீஸ் ஆகியவற்றின் விலை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கைச் சிற்றூண்டிசாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷனா ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

பால்மாவின் விலை உயர்வைக் கருத்திற்கொண்டு இந்த விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



நாளை
வியாழக்கிழமை-பங்குனி- 20
03.04.2025
சுபநேரம் : 07.40- 09.10
ராகுகாலம் : 01.40 - 03.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னுதாரணச் செயற்பாட்டில் கோணாவில் ம.வி. மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைகள் கடந்த புதன்கிழமை நிறைவடைந்த நிலையில் கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலய மாணவர்கள் பாடசாலைச் சூழலைத் தூய்மைப்படுத்தி பாடசாலை மதிலுக்கு வர்ணம்பூசி மெருகூட்டியுள்ளனர்.

பரீட்சை முடிவடைந்த பின்னர் பாடசாலைச் சீருடைகளில் மைகளைத் தெளித்து விளையாடும் மாணவர்கள் மத்தியில் கோணாவில் மகாவித்தியாலய மாணவர்களின் இந்தச் செயற்பாடு பலராலும் பாராட்டுப் பெற்றுள்ளது. (ச-41-66)



## கிளிநொச்சியில் தக்காளி அறுவடை

யு.என்.டி.பி.நிறுவனத்தின் நவீன விவசாயத்திட்டத்தின் கீழ், ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தக்காளிச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் அறுவடை நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் தக்காளிகளை அறுவடை செய்தனர். (ச-25,113)

# முல்லைத்தீவில் இல்மனைட் அகழ்வுக்கு அனுமதியில்லை

### மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தீர்மானம்

**முல்லைத்தீவு, ஏப். 2**
**கொக்கிளாய் முதல் செம்மலைவரை இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தநிலையில், அதற்கு அனுமதி வழங்குவதில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. கொக்கிளாய் முதல் செம்மலை வரை இல்மனைட் அகழ்வதற்கு 'மிஸ்வெஸ்ட் ஹெவி சாண்ட் பிறைவேட் லிமிட்டெட்' நிறுவனம் அனுமதி கோரியிருந்தது. கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் இல்மனைட் அகழ்வுக்குக் கடும் எதிர்ப்புத்தெரிவித்தார். இல்மனைட் அகழ்வதற்கு அனுமதி வழங்கக்கூடாது. கொக்கிளாய் முகத்துவாரத்தில் ஏற்கனவே மக்களுக்குரிய 4 4 ஏக்கர் காணியில், மக்களின் அனுமதி பெறப்படாமல் இல்மனைட் அகழ்வுசெய்யப்பட்டுள்ளது. அந்த இடங்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இல்மனைட் அகழ்வால் கடல்நீர் உட்புகும். மக்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப் போன்று தற்போது அங்கு மிகமோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இல்மனைட் அகழ்வால் மிக மோசமாகப் பாதிக்கப்படுள்ள பொதுமக்களின் காணிகள் சீர்செய்து கொடுக்கப்படுவதுடன், பாதிப்புகளுக்கான நிவாரணங்களும் வழங்கப்படவேண்டும். இனி ஒருவரும் இல்மனைட் அகழ்வுக்காக முல்லைத்தீவுக்கு வரக்கூடாது. அதற்கு அனுமதியும் வழங்கப்படக்கூடாது. மீறிச்செயற்பட்டால் மக்களின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார். கலந்துரையாடல்களின் அடிப்படையில் இல்மனைட் அகழ்வுக்கு அனுமதிவழங்குவதில்லை என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இல்மனைட் அகழ்வால் பாதிக்கப்பட்ட இடங்கள் அகழ்வில் ஈடுபட்ட நிறுவனத்தால் சீர்செய்யப்பட வேண்டும் என்று வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டிய நிலையில், அதுவும் தீர்மானமாக எடுக்கப்பட்டது. (எ-246-26)




## எச்.ஐ.வி. தொற்று நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 2
நாட்டில் இளைஞர்களிடையே எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு 15 முதல் 24 வயதுக் குட்பட்டவர்களில் 115 பேர் எச்.ஐ.வி. யால் பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத்திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் பதிவாகியிருந்த மொத்த எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை 824 ஆகும். அவர்களில் 718 பேர் ஆண்களாவர். கடந்த ஆண்டு பதிவான எய்ட்ஸ் இறப்பு எண்ணிக்கை 47 ஆக பதிவாகியதாகவும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத்திட்டம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## சிறைகளில் இடநெருக்கடி

கொழும்பு, ஏப். 2
கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அங்கு நெரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

650 கைதிகளை அடைக்கக்கூடிய குறிப்பிட்ட சிறைச்சாலையில் சுமார் 2,100 பேர் அடைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வியாழேந்திரன் ஆகியோரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், மற்றைய சிறைச்சாலைகளிலும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமான கைதிகள் தற்போது அடைத்துவைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ச)

## தலைமன்னாரில் மிதந்துவந்த 124 கிலோ கஞ்சா மீட்பு!

தலைமன்னார் மணல் திட்டுக் கடற்பகுதியில் மிதந்துகொண்டிருந்த ஒரு தொகை கஞ்சாப்பொதிகளைக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. இந்தப் போதைப்பொருள்கள் சுமார் 124 கிலோ 392 கிராம் நிறையுடையவை என்றும் அவற்றின் பெறுமதி 49 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் போதைப்பொருள் தொகை ஒப்படைக்கப்பட்டுள்ளது . (ச-இ)



## மீனவர்கள் பிரச்சினையை அரசியலாக்கவேண்டாம்!

இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2
இந்திய அரசியல்வாதிகள் இந்திய-இலங்கை மீனவப் பிரச்சினைகளை அரசியலாக்க முன்படுகின்றார்கள். இரு நாட்டு மீனவ சங்கப் பிரதிநிதிகளும் கலந்துரையாடி இறுதி முடிவை எடுக்கவேண்டும் என்பதே எங்களது கோரிக்கையாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.


இந்திய மீனவப் பிரதிநிதிகளுடான சந்திப்பு தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் கடல் வளத்தைப் பாதுகாக்கும் அதேநோக்கில், இந்தியாவின் கடல் வளத்தையும் பாதுகாக்கவேண்டும். இந்திய அரசியல்வாதிகள் இந்திய மீனவர்களின் பக்கம் நின்று அந்த மீனவர்களுக்கு உரிய முறையிலான திட்டத்தை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் - என்றார். (ச-27)

## சிறுதானியப்பயிர்கள் வறட்சியால் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் சிறுதானியப்பயிர்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். சில இடங்களில் வயல்களை அண்டிய கிணறுகள் மற்றும் நீர்நிலைகளிலிருந்து தண்ணீர் இறைக்கப்பட்டுப் பயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அடுத்த வாரத்திலும் மழை பெய்யாவிட்டால், சிறுதானியப் பயிர்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்படும்நிலை ஏற்படும் என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செல்லப்பா சுவாமிகள் குருபூஜை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 2

நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 110 ஆவது ஆண்டு குருபூஜை நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்றன.

செல்லப்பா சுவாமிகளின் திருவுருவச் சிலைக்குச் சிறப்பு அபிஷேகம், அதனைத் தொடர்ந்து திருமுறை, நற்சிந்தனைப் பாடல் பண்ணுடன் ஓதுதல் என்பன கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகளாக நடைபெற்றன. (ச-22,66)

### கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும்

# இராணுவ ஆக்கிரமிப்பில் 1209.22 ஏக்கர் காணி

கிளிநொச்சி, ஏப். 2

**கிளிநொச்சி மாவட்டத்தில் 1209.22 ஏக்கர் மக்களின் காணிகளை முப்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ளார்கள் என்று வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்புத் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களது காணிகள் பல விடுவிக்கப்படாது இராணுவத்தினர் வசம் காணப்படுகின்றன.

அந்தவகையில், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 653.65 ஏக்கரும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 180.38 ஏக்கரும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 116.61 ஏக்கரும், பூநகரிப் பிரதேசசெயலர் பிரிவில் 248.18 ஏக்கரும் என 1209.22 ஏக்கர் காணி இராணுவத்தின் வசமுள்ளது.

எனவே மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும் - என்றார். (ச-110)



## வவுனியாவில் நோன்புப் பெருநாள்

வவுனியா, ஏப். 2

இஸ்லாமியர்களின் விசேட தினமான ரம்ழான் நோன்புப் பெருநாள் வவுனியா பட்டானிச்சூர் பெரிய பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. பள்ளிவாசலின் பிரதான மௌலவி பர்கானால் விசேட தொழுகை நடத்தப்பட்டது. இஸ்லாமியர்கள் தொழுகையில் கலந்து கொண்டதோடு, பெருநாள் வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொண்டனர். (ச-41-110)

## ஆண்டுவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 2

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 85ஆம் ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்ட நிகழ்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலைய முன்றலில் காலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளன.

அத்துடன் நிலைய சிறார்களுக்கான ஓட்டம் மற்றும் நிலைய அங்கத்தவர்களுக்கான மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ச-41)



## மகாஜன மாணவன் பளுதூக்கலில் வெண்கலம்!

யாழ்ப்பாணம், ஏப். 2

தேசிய ரீதியில் நடைபெற்ற ஜூனியர் நஷனல் பளுதூக்கல் சம்பியன்ஷிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் ஜே.ஜெனுசின், 98 கிலோகிராம் பிரிவில் 175 கிலோகிராம் எடையைத் தூக்கி வெண்கலப்பதக்கம் பெற்றுள்ளார். இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலநறுவையில் இடம்பெற்றது. (ச-22,66)

## மூளாய்க் கந்தனுக்கு இன்றுகொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 2

மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை மஞ்சமும், எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் பங்குனி உத்திர நன்னாளில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (ச)

## வேட்பாளர்களுடன் கலந்துரையாடல்

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தமிழர் ஒன்றியத்தின் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல்02 மணியளவில் கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள ஐக்கிய தமிழர் ஒன்றியத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது. கலந்துரையாடலில் வேட்பாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஐக்கிய தமிழர் ஒன்றியத்தின் தலைவர் என்.சிறீந்திரன் கேட்டுள்ளார். (ச-66)

# உள்ளூராட்சித் தேர்தலில் சிந்தித்து வாக்களியுங்கள்

### தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் சிந்தித்துத் தங்கள் வாக்குகளைச் செலுத்தவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தாவது-

இனப்படுகொலை செய்யப்பட்ட மக்கள் என்ன நோக்கத்துக்காக தங்களின் உயிர்களைத் தியாகம் செய்தார்களோ அவற்றை மனதில் வைத்து தமிழ்த் தேசியத்துக்காக, தமிழ் மக்களின் விடுதலைக்காக, வடக்குக் கிழக்கில் பௌத்தமயமாக்கலைத் தடுக்க தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். பிமல் ரத்நாயக்க, அரசியற் கைதிகளை விடுவிக்கமுடியாது என்று கூறும்போது, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுடன் ஒட்டிநிற்கின்றனர்.

ஆக்கபூர்வமான எந்த விடயமும் இந்த அரசாங்கத்தில் இல்லை. ஜே.பி.வி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகவியலாளர்களைக்கூட அச்சுறுத்துகின்றார்.

கடந்த நாடாளுமன்றத்தேர்தலில் விட்ட பிழையை எம்மவர்கள் மீண்டும் உள்ளூராட்சித் தேர்தலில் விடக்கூடாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த்தேசியக் கட்சி, தமிழ் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு என்பன இணைந்து சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். இறுதிச் சந்தர்ப்பத்தை இழந்துவிடாது மக்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கவேண்டும் - என்றார். (எ-125)



யாழ். இந்துக் கல்லூரிக்கு விஜயம்செய்த உதயன் குழுமத்தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் யாழ். இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவு


யாழ்ப்பாணம், ஏப். 2

சிறுப்பிட்டி வடக்கு மாதியந்தனை இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமைவரை தினமும் மாலை 6.30 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

சைவப்புலவர்கள் ஏ. அனுசாந்தன், செ. கந்த. சத்தியதாசன், பொன். சந்திரவேல், செ. த. குமரன், க. கைலநாதன் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் ச. நவநீதன், நித்திய பாபுதரன், க. கயிலைவாசன், த. வனோஜ்குமார் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளார்கள். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச- 25)

# 300,000 மக்களை நிலநடுக்கம் விழுங்கலாம்

## ஜப்பான் அதிர்ச்சித் தகவல்



டோக்கியோ, ஏப். 2

ஜப்பானின் பசுபிக் கடற்கரையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டால் 3 இலட்சம் மக்கள் உயிரிழக்கக்கூடும் என அதிர்ச்சித் தகவலை ஜப்பானிய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஜப்பான் உலகின் மிகவும் நிலநடுக்கம் ஏற்படக்கூடிய நாடுகளில் ஒன்றாகும். அங்கு 'நங்காய் ட்ரப்' என்ற நிலத்தடிப் பகுதியில் 8 முதல் 9 வரையிலான ரிக்டர் அளவில் ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்படுவதற்கு சுமார் 80வீத சாத்தியக்கூறு உள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை அண்மையில் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது ஒரு மிகப்பெரிய நிலநடுக்கமாக இருக்கலாம். இதனால் பெரும் சுனாமிகள், கட்டடங்கள் இடிந்து விழுதல் மற்றும் சுமார் 3 இலட்சம் உயிரிழப்புகள் ஏற்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நிலநடுக்கம் நிகழ்ந்தால் ஜப்பான் பொருளாதாரத்தில் 1.8 ட்ரில்லியன் டொலர் நட்டம் ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்

### உதயசந்திரன் சீதாலட்சுமி



76 பத்திரகாளி கோவில் வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட உதயசந்திரன் சீதாலட்சுமி அவர்கள் நேற்று (01.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 577 7717
077 505 6037

(CS 2875) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 09 . 1945



மறைவு 31 . 03 . 2025

### அமரர் விசுவலிங்கம் சுப்பிரமணியம்
### (கணேஸ் அண்ணை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் விசுவலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் (31.03.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் ராசம்மா அவர்களின் அன்பு மகனும் நடராசா சித்திரவல்லி ஆகியோரின் மருமகனும் மகாலட்சுமி அவர்களின் அன்பு கணவனும் தபேந்திரன் சியாமலா யசோதா மகேந்திரன் ஆகியோரின் தந்தையும் சசிகலா, ஞானேஸ்வரன், பிரணவன் ஆகியோரின் மாமனும் துவாரகா, நிதுரன், சங்கவி, அச்சுதன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற லட்சுமிதேவி மற்றும் பாலகிருஷ்ணன் விஜயரட்ணம், பாலராமன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் லக்சுமி மற்றும் சரவணபவன் காலஞ்சென்ற சண்முகவேல்-அற்புதவேல், விஜயலக்சுமி மற்றும் தனலச்சுமி, முத்துக்குமார், செல்வலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2025) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாற்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

Dr.செல்லத்துரை வீதி,
சங்கரத்தை
வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 05 1951



மறைவு 29 03 2025

### கபிரியேல்பிள்ளை சில்வெஸ்டர்
### (மாணிக்கராசா)

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும், இல.7/3, புனித பத்திரிசியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல்பிள்ளை சில்வெஸ்டர் கடந்த (29.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சைமன் சிங்கோ - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சகாயமேரி (சரசு) யின் அன்புக் கணவரும், கலிஸ்ரா லோஜினி (லண்டன்), அனிற்றா கிஷாந்தி (சூட்டி - சுவிஸ்), ஜெனிற்றா தர்சினி (லண்டன்), லூட்ஸ் சர்மினி (ஆசிரியை - வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெவ்றி (லண்டன்), நோபேட் (சுவிஸ்), றீகன் (லண்டன்), ஜொனி கியோமன் (முகாமைத்துவ உதவியாளர் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷெரீனா, ஷெரோன், ஹட்றியன், றபாயல் ஆகியோரின் அன்புப் பேரனும், பேபி, இராசிங்கம், குமாரத்தி, ஜோர்ச், பெரியபுள்ளை (இத்தாலி), சின்னக்கிளி, சாரதா, புனிதம் (பிரான்ஸ்), சாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செபமாலை, நாதன், ராதா, கிருஷ்ணபிள்ளை, றோபேட், ராணி, தாசன் (பிரான்ஸ்), நோணி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சின்ராசா, கிறிஸ்ரி, பபி, அப்பன், இராசிங்கம், அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.04.2025) புதன்கிழமை மாலை 03.00 மணிக்கு அசம்பளி ஒப் கோட் யாழ்ப்பாணம் திருச்சபையினரால் அன்னாரின் இல்லத்தில் நடத்தப்பட்டு, அவருடைய சரீரம் வசந்தபுரம் கெலன் தோட்டத்தில் அமைந்துள்ள அசம்பளி ஒப் கோட் திருச்சபையினரின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7/3, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2874) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உங்களுக்கான
> மிகப்பெரிய வாய்ப்பானது,
> நீங்கள் இப்பொழுது
> எங்கிருக்கீறீர்களோ
> அங்கேயேகூட
> இருக்கலாம்.
> - நெப்போலியன் ஹில்

இரா.நிசாந்தன்
*தமிழாசிரியர்*
*கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம்*

# விவசாயத்தில் நாம் நினைக்க மறந்தவை



உலகில் உள்ள தொழில்கள் அனைத்துக்கும் முதுகெலும்பாகத் திகழும் தொழில் என்றால் அது விவசாயம்தான். இதனை வள்ளுவரே தன் குறள்வழி உறுதிசெய்கின்றார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்வார் " என்கின்றது வள்ளுவம்.

உழவுத்தொழில் தனியொரு மனிதனுக்கு மட்டுமன்றி மனித குலம் முழுவதிற்கும் அடிப்படையாக அவர் தம் வாழ்வோடு ஒன்றிணைந்துபோன உயிரூட்டம் எனலாம். விவசாயம் என்பது ஓர் கலையாகும். விவசாயத்தில் பல்வேறு படிமுறைகள் சார்ந்து ஒரு வாழ்வியல் சக்கரமே சுழலுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்களா? அதுதான் உண்மை. நிலத்தை உழுது பயிர் விதைப்பது முதலாக அந்தப் பயிரை அறுவடை செய்வது வரையில் பின்பற்றக் கூடிய படிமுறைகள் எம் வாழ்வியலோடு இணைந்துள்ளன எனலாம். ஆனாலும் இன்று விவசாயத்தில் நாம் கடைப்பிடித்துவந்த படிமுறைகள் பலவற்றை நாம் மறந்துபோய்விட்டோம். அல்லது அவை மறைந்து போய்விட்டன என்றே கூறலாம். எனவே விவசாயத்தில் இன்று மறைந்து போன அம்சங்கள் குறித்துப் பேசுகின்றது இந்தக் கட்டுரை.

### ஏர் பூட்டி உழுதல்

விவசாயத்துக்கு உழவுத்தொழில் என்று ஒரு பெயருண்டு. அது நிலத்தை உழுது அதாவது கிளறிப் பயிர் விளைவித்தல் எனும் பொருள் கருதி வழங்கப்பட்ட பெயர் எனலாம். இவ்வாறு நிலத்தை உழுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு கருவி ஏர் என அழைக்கப்படுகின்றது. இதற்குக் கலப்பை, மேழி எனும் வேறு பெயர்களும் உண்டு. கூரிய அலகு (இதனை நுகம் என்று அழைப்பர்) ஒன்றினை மரத்தில் அல்லது இரும்பில் பிணைத்து அதில் எருது அல்லது காளை மாடுகளை இணைத்து மண்ணைத் தளர்வாக்கி கீழ் மேலாக கிளறுவதற்கு இது உதவும். இதன் காரணமாக மண்ணில் போதியளவு இடைவெளி கிடைக்கின்றது. இதனால் அந்த மண்ணில் பயிரிடப்படும் பயிரானது ஆரோக்கியமாக வளர்ந்துவரும். முன்னைய காலங்களில் நெல்லை பயிரிடுவதற்கு உரிய பருவத்தில் நிலத்தை ஏர்கொண்டு உழுவான் உழவன். அவ்வாறு உழும் போது கலப்பையில் பூட்டப்படும் மாடுகளுக்கும் விவசாயிக்கும் இடையில் நெருங்கிய உறவாடல் காணப்படும். நிலத்தை உழும் போது ஏற்படும் களைப்பினைப் போக்கவே அந்த உழவன் பாடல் பாடி தனது பணியைத் தொடர்வான். இது ஏர்ப்பாடல் என்று அழைக்கப்பட்டது. ஆனால் இன்று ஏர் கொண்டு நிலத்தை உழுவதைப் பெரும்பாலும் காணமுடியாதுள்ளது. நவீன இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரத்தின் உதவியுடன் இன்று வயல் நிலங்கள் உழப்படுகின்றன.

இன்றைய இளம் சந்ததியினர் பலருக்கு ஏர் என்றால் என்ன என்பது தெரியாமலே உள்ளது. மேலும் ஏர் கொண்டு நிலத்தை உழும் மரபு பற்றியும் அவர்கள் அறிந்திருப்பது மிகவும் குறைவே.

### களை பிடுங்குதலும், நாற்று நடுதலும்

வயல் நிலங்களில் நெல்லைப் பயிரிட்டபின் அது வளர்ந்து வரும்போது அதனுடன் இணைந்து களையும் வளர்ந்து வரும். அந்தக் களைகள் மற்றும் புற்கள், நெற்பயிர்களின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதால் அவற்றை உரியவாறு பிடுங்கி அப்புறப்படுத்தும் செயற்பாடே களை பிடுங்குதல் அல்லது களை அகற்றுதல் எனப்படும். இன்று களை பிடுங்கும் செயற்பாடு இடம்பெறுவது மிகவும் குறைவே. களைகளை அகற்றுவதற்கு நச்சு மருந்துகள் அடிப்பதை இன்றைய விவசாயத்தில் நாம் காணமுடிகின்றது.

மேலும் நெல்லைப் பயிரிட்டபின் அது வளர்ந்து வரும் சமயத்தில் சில இடங்களில் பயிர்கள் உரியவாறு முளைத்திருக்காது. அந்த இடைவெளிகளில் புதிதாக நெற்கதிர்களை நடும் மரபு காணப்பட்டுள்ளது. இதுவே நாற்று நாடுதல் என அழைக்கப்படுகின்றது. இன்றும் நாற்று நடுதல் எனும் மரபு இடம்பெற்று வந்தாலும் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவு என்று கூறலாம்.

### அரிவு வெட்டுதல்

வயலில் நெல்லைப் பயிரிட்டு உரியவாறு பராமரித்தபின்னர் நெல் அறுவடைக்குத் தயாராகும். அவ்வாறு அறுவடைக்கு தயாரான நெற்கதிர்களை அறுவடை செய்யவேண்டும். முன்னைய காலத்தில் அரிவாள் எனும் கருவியின் துணை கொண்டு நெல்லை வெட்டி எடுப்பர். ஒரேசமயத்தில் பலர் ஒன்று சேர்ந்து நெற்கதிர்களை அரிவாளால் வெட்டியெடுக்கும் செயற்பாடு மகிழ்ச்சியைக் கொடுப்பதோடு உடலுக்கு பயிற்சியாகவும் அமைகின்றது. முன்பு அறுவடை செய்தலை ஒரு திருவிழாவைப் போல கடைப்பிடித்துள்ளனர் எங்கள் முன்னோர். இன்றைய காலத்தில் அரிவுவெட்டும் செயற்பாடு இடம்பெறுவது இல்லை. அரிவாளின் பயன்பாடும் இன்று பயன்பாட்டில் இல்லை என்றே கூறலாம். இன்று அரிவு வெட்டுவதற்கென்று இயந்திரங்கள் காணப்படுவதால் அவற்றின் உதவியோடு அரிவு வெட்டப்படுவதை நாம் அறிவோம்.

### சூடு மிதித்தல்

வயல் நிலத்தில் அரிவாளால் வெட்டிய நெற்கதிர்களை சிறு சிறு கட்டுக்களாகக் கோர்த்து அவற்றைத் தலையில் சுமந்து வந்து வயல் நிலத்தில் ஓர் இடத்தில் ஒன்றாகக் குவித்து வைப்பார்கள். இவ்வாறு அறுத்து கட்டப்பட்ட நெல் கட்டுக்கள் உப்பட்டி எனும் பெயரால் அழைக்கப்படும். மேலும் நெற்கட்டுகளை ஒன்றாகச் சேர்க்கும்போது அவை குவித்து ஒரு குவியல்போல காணப்படும். இதனைச் சூடுவைத்தல் என்று அழைப்பர்.



இவ்வாறு சூடுவைக்கப்பட்ட நெற்கதிர்கள் நன்றாகப் பழுத்து நெல் மணிகள் கீழே உதிர்ந்து விழுவதற்கு ஆயத்த நிலையில் இருக்கும். இந்நிலையில் சூடு மிதித்தல் அல்லது சூடு அடித்தல் எனும் செயற்பாடு இடம்பெறும். பொதுவாக இது பலமுறைகளில் இடம் பெற்றுள்ளது.

நெற்கட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து பெரிய கல்லில் அல்லது மரக்கட்டையில் அடிப்பர். இதன்போது நெல் மணிகள் இலகுவாக வைக்கோலில் இருந்து பிரிந்து தனியே வரும். இதற்கு கொஞ்சம் நேரம் அதிகமாக எடுக்கும். இன்னொரு முறை சூடு வைக்கப்பட்ட நெற் குவியலை எருது அல்லது காளை மாடுகள் மூலம் மிதிக்கச் செய்தல். ஆனால் இவற்றை விட அதிகம் பின்பற்றப்பட்ட முறை, உழவு இயந்திரத்தின் மூலம் சுற்றிச்சுற்றி சூடு வைக்கப்பட்ட உப்பட்டியை மிதித்தலாகும். இதன்மூலம் நேரம் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. விரைவாக சூடடித்து முடிந்துவிடும். சூடடித்து முடிந்ததும் நெல் மணிகள் வைக்கோலில் இருந்து தனியாக பிரிந்திருந்தாலும் அவற்றுடன் புற்கட்டைகள், தூசிகள், கூழங்கள் என்பன சேர்ந்து காணப்படும். இவற்றையெல்லாம் அகற்றுவதற்கு நெல் தூற்றுதல் எனும் செயற்பாடு இடம்பெறும். காற்றின் துணைகொண்டு சுளகில் நெல்லை எடுத்துத் தூற்றப்படும். இதன் மூலம் நெல் மணிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு அவை சாக்குப்பைகள் அல்லது பைகளில் கட்டப்படும். இந்த சூடடித்தல் செயற்பாடு பெரும்பாலும் வயல் நிலங்களில் இடம் பெற்றாலும் சில சமயம் வீட்டுக் காணிகளிலும் இடம்பெறும். முன்னைய காலங்களில் மின்சார வசதி இல்லாத சந்தர்ப்பங்களில் பெற்றோல்மாக்ஸ் (இதுவும் இன்று மறைந்து போன ஒன்று) துணையோடு இரவுவேளைகளில் சூடடித்தல் செயற்பாடு இடம்பெறும். இந்தச் செயற்பாடு இடம்பெறும்போது வீட்டில் பெருமகிழ்ச்சி இழையோடும். ஆனால் இன்று சூடடித்தல் எனும் மரபானது முழுமையாக இல்லாது போய்விட்டது. விவசாயத்தில் கடைப்பிடித்த பல்வேறு மரபுகள் இன்று அதிகம் கடைப்பிடிக்கப்படாமல் மறைந்துபோய்விட்டன. முன்னைய காலத்தில் விவசாயம் என்பது எம் வாழ்வியலில் மகிழ்ச்சியின் உச்சத்தைக் கொடுத்தது என்பதை அதை அனுபவித்தவர்கள் நன்கறிவார்கள். எனவே இன்றைய இளம் சந்ததியினருக்கு விவசாயத்தின் மேன்மையை நாம் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமானது. அத்துடன் மேலே நாம் கண்டுகொண்ட அருகிச்செல்லும் விவசாய மரபு சார்ந்த தன்மைகளையும் அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். விவசாயம் மனித குலத்தின் பண்பாட்டோடு இணைந்த ஓர் அழகியல் உணர்வு என்பதை அறிந்து அதனை அழியாமல் கடைப்பிடிக்க வழி செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாடக ஆளுமை குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவாக

# உலக நாடக திவிழா!





உலக நாடக தினத்தை முன்னிட்டு நாடக ஆளுமை குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவாக நடத்தப்பட்ட உலக நாடகதின விழா சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் சிறப்புற இடம்பெற்றது.

இதன்போது குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி இடம்பெற்றது. நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.ரதிதரன் நிகழ்த்தினார் .

தொடர்ந்து நாடக அரங்கக் கல்லூரியின் 'தான் விரும்பாத் தியாகி', சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலைய மாணவர்களின் 'கற்று உணர்வோம்' கூத்தாட்டு அவைக்கழகத்தின் 'பட்டறிவு' , ரவர் நாடக அரங்க கற்கைநெறி முதலாம் வருட மாணவர்களின் 'வசந்தன் கூத்து', செம்முகம் ஆற்றுகை குழுவின் 'எங்கே எங்கே குடை எங்கே',வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தின் 'வார்த்தைகளற்ற நடன நாடகம்' , சண் நாடகக் குழுவின் 'முட்டை' ஆகிய 7 நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

நிகழ்வில் சண்டிலிப்பாய் கலாசார உத்தியோகத்தர் யாழினி யோகஸ்வரன், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், நாடக ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (125)



மருத்துவர் சி. யமுனாநந்தா

## உள்ளூராட்சி மன்றங்களும் திண்மக்கழிவு முகாமைத்துவமும்

எமது பிரதேசத்தின் கழிவுமுகாமைத்துவத்தில் உள்ளூராட்சிமன்றங்கள் மிகவும் முக்கியமான பாத்திரத்தினை வகிக்கின்றன. உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களிலும் அரசியலிலும் கழிவுமுகாமைத்துவம் மிகவும் நுட்பமானதாகும். யாழ். போதனா மருத்துவமனையின் பெரும்பான்மையான கழிவுகள் யாழ்ப்பாணம் மாநகரசபையின் உதவியினாலேயே சட்டப்படி அகற்றப்படுகின்றன. அவ்வாறே கழிவு நீரும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் கண்காணிப்பில் சுத்திகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றது. மேலும் மருத்துவக்கழிவுகள் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட எரியூட்டிகளின் ஊடாக சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் மேற்பார்வையில் அகற்றப்படுகின்றன. எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கும் மருத்துவ சேவைக்கு ஏற்ப வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பில் மேலதிக எரியூட்டிகள் அமைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே எமது இன்றைய சூழலில் உள்ளூராட்சி மன்றங்கள் கழிவு முகாமைத்துவ மேலாண்மையை எவ்வாறு சமூக அர்ப்பணிப்புடன் மேற்கொள்வது என்பது சிந்திக்கவேண்டிய விடயமாகும்.




## அன்பே நல்லறமாகும்

'தூயோராய் இருங்கள். உங்கள் மீது நீங்கள் அன்பு கூர்வது போல் உங்களுக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக' என்கிறார் ஆண்டவர். நாம் கடவுளின் வழியில் தூயோராய்மாற அன்புச் செயல்களே அடித்தளமிடும். குறிப்பாகத் தேவைகளில் உதவிக்கரம் நீட்டும் அடுத்திருப்போருக்கு உதவிகள் புரிந்து அவர்களது மகிழ்வில் இன்பம் காணும்போது கடவுளின் சாயலில் வளருகின்றோம்.



நிலைவாழ்வுபெறவேண்டுமெனில் நற்செயல்களால் எம்மை அணிசெய்ய வேண்டும். பசியுடனும், தாகத்துடனும், அந்நியராகவும், ஆடைகளின்றியும், உறையுள் அற்றும், நோயுற்றும், சிறையிலும், தனிமையிலும் உள்ளோருக்குக் கைகொடுத்து அவர்களது சிரிப்பில் இறைபிரசன்னத்தைக் காணவிளையும்போது "ஆசி பெற்றவர்களே வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாக பெற்றுக்கொள்ளுங்கள்" என இறையாட்சியில் இறைவன் எம்மைப் பங்காளராக்குவார்.

அன்றாடம் எம் வாசலைத் தட்டும் உண்மையான இலாசர்களை இனங்கண்டு அவர்களது தேவைகளை நிறைவேற்ற முயல்வோம். சின்னஞ்சிறியவர்களின் நலனுக்காக எம்மைத் தியாகம் செய்வதில்தான் சாதனைத் தன்மை அடங்கியுள்ளது என்பதை உணர்ந்து நேர்மையுடன் செயலாற்றுவோம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் கல்வி
## பெண்களின் உரிமை



**நிசன்குமார் கோபிநாத்,**
*முதலாம் வருடம், கலைப்பீடம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

*"ஊதுகுழலை கையில் எடுக்கும் பெண்கள்*
*எழுதுகோலை கையில் எடுக்கவேண்டும்"*

என்ற பாரதியாரின் கவிவரியானது பெண்களைக் கல்விப் பாதையை நோக்கி வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. சமையலறையில் ஊதுகுழலை கையில் எடுக்கும் ஒரு பெண் எழுதுகோலை கையில் எடுத்தால் முழு சமுதாயமும் பெண் வசப்படும். அவ்வளவு பெருமை உடையவள் பெண்; மனித இனத்தில் பெண்ணியம் மற்றும் பெண்ணுரிமை போன்ற சொற்கள் வயது வேறுபாடுகளைக் கடந்து எல்லா பெண்களையும் குறித்து நிற்கின்றது. ஆரம்பக்காலத்தில் பெண்கள் ஆண் வர்க்கத்தினரால் வழிநடத்தப்பட்டார்கள். அவர்களின் உரிமைகள், நலன்கள், சுதந்திரம் என்பன மறுக்கப்பட்டன. சமய நம்பிக்கைகள், மரபுகள், வழக்காறுகள் என்பன அவர்களுக்குப் புறம்பாகவே இருந்தன. பெண் அடிமைமுறை ஒழிய வேண்டும் என குரல் கொடுத்தவர்கள் பலர். அதில் பாரதியார் முக்கியமானவர். அவர் பெண் விடுதலை பற்றிய கருத்தை சமூகத்திற்கு எடுத்துரைக்க கவிதை, கட்டுரை, பாடல்களை வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலத்தில் மாத்திரம் பெண்களுக்கு சுதந்திரம் உறுதி செய்யப்பட்டிருந்தால் இச்சமயம் பல துறைகளில் சாதனை சிற்பிகளாக உலகமெங்கும் சுடரொளியை பரப்பியிருப்பார்கள்.

### பெண் கல்வியின் சிறப்பம்சம்

19 ஆம் நூற்றாண்டில் இருந்து இன்று வரை பெண்களின் முன்னேற்றத்திற்காக இடைவிடாது எடுக்கப்பட்ட முயற்சியே பெண் கல்வியாகும். அந்த வகையில் இன்றைய உலகில் எல்லா மனிதர்களையும் இன, மத, பேத பாகுபாடின்றி எல்லோராலும் போற்றப்படும் ஓர் ஆயுதமாக பெண் கல்வி காணப்படுகின்றது. அது பெண்ணியத்தில் வலுப்பெற்றால் இன்றைய நவீன சமூகத்தில் கல்வி உலகமாற்றத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் மாற்றும் அடித்தளமான சக்தியாக உருவெடுக்கும். தொழிலையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ளும் சமுதாயம் பெண்களின் நலனையோ அவர்களின் திறமையினையோ கருத்தில் கொள்வதில்லை. ஒரு ஆண் கல்வி கற்றால் அவன் மட்டுமே நன்மை அடைவான். ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் அவளுக்குப் பின்னால் வரும் சமூகமே கற்கின்றது. காரணம் குடும்பத் தலைவியாக உள்ள ஒரு பெண் கல்வியால் அறிவை பெற்றால் அதனால் அவளது பிள்ளைகளையும் சிறப்பாக வழிநடத்துவாள்.

கல்வியால் வெற்றியடைந்து விண்வெளிவரை பெண்களின் கால்தடம் பதிந்துள்ளது. அதற்குக் காரணம் கல்வி எனும் பெருஞ்செல்வமே என்பதை மறுக்கமுடியாது. விண்வெளி வீராங்கனையான வாலண்டினா திரைஸ்கோவா 26 ஆம் வயதிலேயே விண்வெளி சென்ற இளம்பெண் ஆவாள். இது பெண் சமுதாயத்திற்கு மிகப்பெரிய வெற்றியும்கூட. பெண் கல்வியே அவர்களின் இனத்தின் விடுதலைக்கும் வெற்றிக்கும் ஒரு வழிகாட்டியாக அமையும். உலகில் பல்வேறு சாதனைகளைப் படைத்த பெண்களும் இவ்வுலகில் உள்ள மற்ற பெண்களுக்கு கூறுவது எம்மைவிடவும் சாதனை படைக்கிற பெண் சமுதாயம் உருவாக வேண்டும் என்றே.

### தற்காலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

சமூகத்தில் கல்வியில் உயர்ந்து சிறப்பிக்கின்ற பெண்களும் சரி, கல்வியில் உயர்மட்டத்தை அடையவேண்டும் என்ற இலக்கில் பயணிக்கின்ற பெண்களும் சரி, பொருளாதார பிரச்சினை காரணமாக கல்வி நடவடிக்கைகளை இடையில் கைவிட்டுத் தொழில்களை நாடிச் செல்கின்றார்கள். இதனால் அவர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் பாலியல் கொடுமைகளுக்கும் உட்பட்டு வாழ்க்கையும் சீர்குலைந்த நிலைக்கு உள்ளாகின்றது. 2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை குறிப்பிடுகின்றது. இது சராசரி ஒரு மணித்தியாலத்தில் ஆறு பெண்கள் கொல்லப்படுகின்றார்கள். மேலும் உலகம் முழுவதும் 80 பெண்களில் பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். இது பெண் வன்முறையின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியத்தின் அறிக்கையின்படி, இரண்டு வருடங்களுக்கு முன்னரான அறிக்கையில் முன்வைத்ததன் படி, இன்று வரை பெண்களுக்கான வன்முறைகள் அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை. இதனால் எதிர்காலத்தில் முழு பெண் சமுதாயமே ஒரு பாதிப்பை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்கி விடுகின்றது.

### பிரச்சினைகளுக்கான தீர்வு

பெண்கள் பற்றியும் அவர்களது முக்கியத்துவம் பற்றியும் சமூகம் மற்றும் உலகளாவிய ரீதியில் பெண்கள் பாதுகாப்பு தொடர்பான கருத்துகளை வலுப்பெறச் செய்து பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வினை எய்துவதற்கு அடித்தளமாக அமையும்.

பெண்களுக்கான சர்வதேச அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை, வேர்ல்ட் யுவி போன்ற அமைப்புக்களின் ஊடாக பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சி திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பால்நிலை சமத்துவம் தொடர்பான எண்ணக்கருவினைக் கட்டியெழுப்புவதோடு அது தொடர்பான கல்வியை பாட அத்தியாயத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதோடு அது தொடர்பான சர்வதேச, தேசியமட்ட நிகழ்சி திட்டங்களை மேம்படுத்தல் வேண்டும். அத்துடன் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாகக் காணப்படுகின்ற சட்டதிட்டங்களை கடுமையாக பின்பற்றச் செய்து புதிய சட்ட விதிமுறைகளை உட்சேர்த்தல் வேண்டும்.

பெண்ணியம் சிறந்து ஓங்கினால் மட்டுமே நாடு சக்தியின் பிரதிவிம்பமாகத் திகழும் என்பதை நம் மனதால் அனைவரும் உணரவேண்டும். அவர்களுக்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வுலகில் பெண்ணை போற்றும் சமுதாயம் மட்டுமே சீரும் சிறப்புமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே பெண்ணியம் போற்றி கண்ணியம் காப்போம்.



## முதுமைக் குடைகள்

ஒரு காலத்தில்
இந்தக் குடைகள்
பள பளப்பாகவும்
வண்ணமயமாகவும்
ஜொலித்தவைதான்!

பெரும் மழையென்றாலும்
அனல் வெயிலென்றாலும்
இழுத்து இழுத்து
நனையவிடாமல்
நிழல் கொடுத்துத்
தாங்கிய குடைகள்தான்

சில குடைகள்
கிழிந்து தொங்கினாலும்
மூலையில் முடங்குவதில்லை
ஒருசில குடைகள்
கிழிசல்களை தைத்துவிட்டு
உழைத்துமிருக்கின்றன

சுற்றியடிக்கும்
காற்றைக்கூட எதிர்த்துக்
காப்பாற்றிய குடைகள்
எந்தத் தருணத்திலும்
கைதவறிப் போக விட்டதில்லை

பல இன்னல்களில் இருந்து
காப்பாற்றிய இந்தக்குடைகள்
மெல்ல மெல்ல
மூலைக்குள் முடங்கிவிடும்

காலப்போக்கில்
எவருக்காக
உழைத்தார்களோ
அவர்களால்
விடுபட்டு, பார்ப்பாரற்று

முதியோர் இல்லம்
என்ற சந்தையில்
ஒப்படைக்கப் படுகின்றன,
இச் சந்தையில்
கொடுக்கத் தான்
வருவார்கள்
வாங்க எவரும் வருவதில்லை
பராமரிக்கவோ, எடுத்துச்
செல்லவோ
எவருமற்று இறுதியில்
இத்துப்போய்விடுகின்றன.

**யோர்மனி வயவை லம்போ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாவகச்சேரி மட்டுவில் வடக்கு பன்றித்த லைச்சி கண்ணகை அம்மன் கோவிலில் மூன்றாம் பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறப்புற இடம் பெற்றது. (ச-25,9-66)

# 'மூச்சடங்கா இரவுகள்' இசை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 2

'மூச்சடங்கா இரவுகள்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா கொடிகாமத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கையின் அதிகமான இடங்களில் படமாக்கப்பட்ட இந்தத் திரைப்படம் ஈழத்தமிழர்களின் வாழ்வியலை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. (ச-25,27)






# சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 2

இணுவில் பொது நூலக ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. போட்டியில் யாழ். மாவட்ட ரீதியாக பாடசாலைகளிலிருந்தும் தனியார் கல்வி நிலையங்களிலிருந்தும் 639க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். (ச-41)





# யாழ். பல்கலை வணிகபீடத்தில் சுகாநல நிலையம் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஏப். 2

கொழும்புத் துறைமுக நகர றோட்டரிக்கழகத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தில் அமைக்கப்பட்ட சுகநல நிலையத்தின் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது.

பெல்ஜியத்தைச் சேர்ந்த றோட்டரிக்கழக சர்வதேச நிதிப்பங்களிப்புச் செயற்றிட்டத்தின் கீழ், மருத்துவ, ஆய்வுகூட உபகரணங்கள் உட்பட ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொழும்புத் துறைமுக நகர றோட்டரிக்கழகத்தினால் வழங்கப்பட்டன.


நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி, கொழும்புத் துறைமுக நகர றோட்டரிக் கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட அலுவலர்கள் மற்றும் மருத்துவ ஆளணியினர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-[illegible])



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை மெல்லமெல்ல விடுவிப்போம்

## வன ஜீவராசிகள் திணைக்களத்தினர்; வடமராட்சியில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 2

தமது எல்லைகளுக்குட்பட்ட பிரதேசங்களில் தமது அனுமதியுடன் கட்டடங்கள் அமைப்பதற்கு தாம் அனுமதி கொடுக்கத் தயாராக இருப்பதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள தமது ஆளுகைக்கு உட்பட்ட இடங்களை நேற்று பார்வையிட்டபோதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

தமது எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் தமது அனுமதியுடன் கட்டடங்கள் அமைப்பதற்கு தாம் அனுமதி கொடுப்போம் எனினும் மருதங்கேணி பருத்தித்துறை வீதியின் ஆற்றங்கரை பக்கம் எந்தவித அனுமதியும் கொடுக்கமாட்டோம்.

ஏனெனில் அந்த எல்லைகள் அதிவிசேட எல்லைகளுக்கு உட்பட்டு இருப்பதால் கட்டடங்களுக்கு அனுமதி கொடுப்பது கடினம்.

மெல்ல மெல்ல எமது ஆளுகைக்கு உட்பட்ட இடங்களை விடுவிக்கவிருக்கின்றோம்.

முக்கியமாக தமது ஆளுகைக்கு உட்பட்ட இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு தம்மை உரியமுறையில் நாடினால் அனுமதி கொடுப்போம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(ச-27)


## கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேசசபை

## சபைநிதி வேலைத்திட்டங்கள் கட்டம் I - 2025

1. சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளரிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் கேள்விகளை கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப் படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
விலைக்கேள்வியாளர்கள் பொது கொன்றாக் சட்டம் 1987 இல 03 ன் பிரகாரம் பதிவிகை மேற்கொண்டிருக்க வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின வகுதி 4 ல் குறிப்பிடப்பட்டுள்னதோடு. மேலதிக தகைமைத் தேவைகளிற்கான வேலைகளுக்கு SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் அட்டவணை (Schedule -5) வகுதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2025.04.02 தொடக்கம் 2025.04.21 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை உள்ளூராட்சி மன்ற பெறுகை குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2025.04.02 ஆம் திகதியிலிருந்து 2025.04.21 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 3,000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2025.04.22 ஆம் திகதி மாலை 02:00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2025.04.22) மாலை 2.00 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41/(6)/2/C.F/2025/02-19 இலக்க வேலைகளுக்கு 77 நாட்கள் (2025.07.07) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். கேள்வி பிணையானது அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் பிணைமுறி அல்லது எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2025.04.10 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C.F/2025/03,04,05 | புளியடி வீதி புனரமைப்பு, கொடிகாமம்<br>பொலிஸ் நிலைய வீதி புனரமைப்பு கொடிகாமம்<br>சுத்திகரிப்பு நிலைய வீதி புனரமைப்பு, கொடிகாமம் | 9.31 | 63 | C8 or above (வீதி நிர்மாணம்) | 93,140.00 | 2025.04.22-2025.08.04 வரை |
| 2 | NP/14/41/(6)/2/C.F/2025/06,07 | செட்டியாவெளி வீதி புனரமைப்பு, கொடிகாமம்<br>காத்தான் செட்டி வீதி புனரமைப்பு, கரம்பகம் | 9.31 | 63 | C8 or above (வீதி நிர்மாணம்) | 93,130.00 | 2025.04.22-2025.08.04 வரை |
| 3 | NP/14/41(6)/2/C.F/2025/08,09,10 | விடத்தற்பளை கெற்பேலி ஊரெல்லை வீதி புனரமைப்பு, விடத்தற்பளை<br>புங்கடி பிள்ளையார் கோவில் வீதி புனரமைப்பு, கச்சாய்<br>சிவகாமசுந்தரி கோவில் முன் வீதி புனரமைப்பு, கொடிகாமம் | 8.45 | 63 | C8 or above (வீதி நிர்மாணம்) | 84,570.00 | 2025.04.22-2025.08.04 வரை |
| 4 | NP/14/41/(6)/2/C.F/2025/11,12,13,14 | சந்தாவளை வீதி புனரமைப்பு, மட்டுவில்<br>கண்ணன் கோவில் இணைப்பு வீதி புனரமைப்பு, மட்டுவில்<br>பனங்காய்குளம் கண்ணகை அம்மன் வீதி புனரமைப்பு, தனங்கிளப்பு<br>சிறி முருகன் வீதி புனரமைப்பு, தச்சன்தோப்பு | 8.45 | 63 | C8 or above (வீதி நிர்மாணம்) | 84,595.38 | 2025.04.22-2025.08.04 வரை |
| 5 | NP/14/41/(6)/2/C.F/2025/15,16 | ஒட்டங்கேணி வீதி புனரமைப்பு, கொடிகாமம்<br>மருதடிப்பிள்ளையார் கோவில் வீதி புனரமைப்பு, [illegible] | 8.66 | 63 | C8 or above (வீதி நிர்மாணம்) | 86,670.00 | 2025.04.22-2025.08.04 வரை |
| 6 | NP/14/41/(6)/2/C.F/2025/17,18,19 | [illegible] வீதி புனரமைப்பு, மீசாலை<br>மீசாலை பரமானந்தம் வீதி புனரமைப்பு, மீசாலை<br>CCTM [illegible] வீதி [illegible] | 9.30 | 63 | C8 or above (வீதி நிர்மாணம்) | 93,030.00 | 2025.04.22-2025.08.04 வரை |

(இ-ச)

தலைவர்.
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேசசபை.

2025.04.02


# ஜனாதிபதித் தேர்தல் ஊடாக ஆட்சியைப் பிடிக்க வியூகம்!

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.2

2029ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றுவோம். அதற்காக வியூகம் வகுத்துச் செயற்படுகின்றோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரைக்கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அதிகளவான சபைகளை எம்மால் கைப்பற்ற முடியும். தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டுமாயின் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும்.

எமது ஆட்சியில் கிராமியப் பொருளாதார அபிவிருத்திக்கு விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கிராமிய மக்கள் கிராமத்தின் அதிகாரத்தை மீண்டும் எமக்கு வழங்குவார்கள்.

இந்த அரசாங்கம் ஆறுமாத காலப் பதவியை நிறைவுசெய்துள்ளது.

ஆனால் புதிய திட்டங்கள் எவற்றையும் இதுவரையில் செயற்படுத்தப்படவில்லை-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லெபனான் மீது தாக்குதல்

பெய்ரூட், ஏப். 2
லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லாக்களுக்கு எதிராக இஸ்ரேல் நேற்று வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் மூவர் உயிரிழந்துள்ளனர். (ம)


## வேலையாட்கள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு வெல்டிங் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 096 9728**

(CS/57883) J-1

## St. Patrick's College, Jaffna

**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்**

**புதிய அனுமதி - 2026**

2026 ஆம் ஆண்டு தரம் 1, தரம் 6 வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2020 - 31.01.2021 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.
- தரம் 6 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2015 - 31.01.2016 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பிறப்புச் சான்றுப் பத்திரம், புகைப்படத்துடன் நேரில் வந்து ஒப்படைக்கவும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 30.04.2025
- தரம் 1 இற்கான அனுமதிப் பரீட்சை 05.07.2025 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்

(CS/57888) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 03 . 1947

மறைவு 01 . 04 . 2025

### இந்திராணி சிவயோகநாதன்

விஸ்வகுலஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அமரர் இந்திராணி சிவயோகநாதன் அவர்கள் நேற்று (01.04.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இந்துமதி தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - இராசம்மா தம்பதியின் அன்பு மருமகளும், சீவரத்தினம் சிவயோகநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், வசீகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சுற்றுலா பணியகம், வடமாகாணம்), முகுந்தன் (கலாசார உத்தியோகத்தர், பருத்தித் துறை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசமலர், இராஜசூரியா, காலஞ்சென்ற சோதிமலர், மற்றும் விஜயா, காலஞ்சென்ற இராசேந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவப்பிரியா, துலோஜனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அஸ்வன்யா, அகரன், நயனி, ஷர்வின், நவினி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**077 844 9742, 077 172 7754**

(CR/44732) J-1

## தசாகாதி கிரகயக்ஞ கிரியைகள்



கடந்த 25.03.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

அவர்களின்

### உத்தரக்கிரியைகள்

**பின்வரும் திகதிகளில் நடைபெறும்**

- 03.04.2025 - வியாழக்கிழமை தசாகம்
- 04.04.2025 - வெள்ளிக்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
- 05.04.2025 - சனிக்கிழமை சபிண்டீகரணம்
- 06.04.2025 - ஞாயிற்றுக்கிழமை கிருகயக்ஞம்பிராம்மண சமாராதனை

விப்ர சிரேஷ்டர்கள் அனைவரும்
இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமூகம் தரவும்.

சிவஸ்ரீ பா. வசந்தன் குருக்கள்
சிவஸ்ரீ ம. தானுநாதக் குருக்கள்
சிவஸ்ரீ ம. சோமநாதக் குருக்கள்
சிவஸ்ரீ ம. ஸ்ரீவத்சாங்கக் குருக்கள்

(cs 30001) N - 1)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். ஆனைப்பந்தியில் விசாலமான 7 அறைகள், 3 களஞ்சிய சாலைகள், 2 விசாலமான வாகனத்தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
அலுவலக, களஞ்சிய பாவனைகளுக்கு உகந்தது.
தரகர் தேவையில்லை

தொடர்பு:- **077 259 5672**

(CS57890) N-1

## பெயர்மாற்றம்

சீந்திப்பந்தல் இளவாலையில் வசிக்கும் ஞானப்பிரகாசம் ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயரை ஞானேஸ்வரன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

ஞானேஸ்வரன்

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 09 . 1959

மறைவு 01 . 04 . 2025

### நடேசன் சந்திரவதனா

இராமலிங்கம் வீதி உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் சந்திரவதனா அவர்கள் நேற்று (01.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2025) புதன்கிழமை மு.ப. 10.00 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமலிங்கம் வீதி, உடுவில்.** **தகவல்: கணவர்**


## சொற்பொழிவு

வீமன்காமம் வடக்கு குருந்தடி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 7 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர்கள் செ. கந்த சத்தியதாசன், செ. த. குமரன், பொன். சந்திரவேல், க. கைலைநாதன், ச. முகுந்தன், மற்றும் இளஞ் சைவப்புலவர்கள் ச. நவநீதன், நித்திய பாபுதரன், க. கயிலைவாசன், த. தனோஜ்குமார் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

மன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதிமூலம் தொடர்பில் உறுதியான தகவல்கள் நீதிமன்றுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

அத்துடன், அகழ்வுகளுக்காக துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவை அழைப்பது தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இவற்றை ஆராய்ந்த மன்று, வழக்கை நாளைமறுதினம்வரை தவணையிட்டுள்ளது. மேற்படி விடயங்கள் தொடர்பான கட்டளைகள் நாளைமறுதினம் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சனும், ரனித்தா ஞானராஜாவும் முன்னிலையாகினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## ஐந்தாண்டுக்குள்...

தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லா விடயங்களையும் ஆறுமாத காலத்துக்குள் செய்யமுடியாது. அதனால் தான் ஐந்தாண்டுகள் ஆணை வழங்கப்படுகின்றது. புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய பணியை ஆரம்பத்தில் இருந்தே ஆரம்பிக்கவேண்டிய தில்லை. நல்லாட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட வரைவு நகல் உள்ளது. மேலும் பல அறிக்கைகளும் உள்ளன.

கால எல்லை தொடர்பில் கேட்டால் என்னால் பதில் வழங்கமுடியாது. ஆனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் உள்ளிட்ட புதிய அரசியலமைப்பு ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் கொண்டுவரப்படும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும். குறித்த முறைமையைத் தக்க வைப்பது தொடர்பில் எவ்வித பேச்சும் நடக்கவில்லை - என்றார். (அ-ம-44)

## பேருந்துக்...

பயணியொருவருக்கு மூன்று ரூபா நஷ்டத்திலேயே பேருந்துகள் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில், அரசாங்கத்தால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிகள் காரணமாக பேருந்துக் கட்டணங்களை உயர்த்த வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, பேருந்துக் கட்டணங்கள் ஜூலை மாதம்முதல் நிச்சயமாக அதிகரிக்கும் - என்றார். (அ-ம-இ)

## சிறைச்சாலை...

பதுளையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் வேலைகளைச் செய்து ஆட்சிக்கு வந்தவர்கள், மாறாக பொய்யுரைத்து அரியணையேறவில்லை. ஆனால் பொய்களால் எம்மை வீழ்த்தினார்கள். மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு நாம் பொய்யுரைக்கவில்லை. அரசியல் பழிவாங்கல்களிலும் ஈடுபடவில்லை. கொள்கை அடிப்படையிலான அரசியலையே முன்னெடுத்துவருகின்றோம். 2018ஆம் ஆண்டு நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வென்றபோது மத்திய அரசாங்கத்தின் பலம் எம்வசம் இருக்கவில்லை. ஆனால் மத்தியில் அதிகாரம் இல்லைஎனநாம்திணறவில்லை. சேவைகளை உரிய வகையில் முன்னெடுத்தோம்.

ஜனாதிபதி தற்போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர்போல் செயற்படுகின்றார். எனக்குச் சிறைக்குச் செல்வது பிரச்சினை இல்லை. சிறைச்சாலையும் ஒன்றுதான், அரசாங்கமாளிகையும் ஒன்றுதான். எம்மீது சேறுபூசுவதால் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை. பொருளாதாரமும் மேம்படப்போவதில்லை - என்றார். (அ-ம-44)

## தவறான...

குடும்பத் தலைவர் ஒருவர், தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 25ஆம் திகதி, வீட்டில் உள்ளவர்களுடன் முரண்பட்டுக்கொண்டு தனக்குத்தானே பெற்றோல் ஊற்றித் தீவைத்த அவர், படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கட்டைக்காட்டில்...

கட்டைக்காடு கடற்பரப்பில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காகவே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களை விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம்நீரியல்வளத்திணைக்களத்தினர் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## யாழ். பல்கலையில்...

பகுதியைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் தலைக்கவசத்தால் தாக்கிச் சித்திரவதை புரிந்தமையால் மாணவனின் காது கேட்கும் திறன் குறைவடைந்துள்ளது. இதனையடுத்துக் குறித்த மாணவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை விளக்கமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பீடத்தைச் சேர்ந்த புதுமுக மாணவன் ஒருவர் சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டமை தொடர்பில் நாம் மிகுந்த வருத்தமடைகின்றோம். சம்பவம் தொடர்பாக அறிந்தவுடன் பல்கலைக்கழகச் சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருடன் நானும் மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மாணவனை நேரில் பார்வையிட்டதுடன் மருத்துவ நிபுணர்களிடமும் கலந்துரையாடினோம். பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோரிடமிருந்தும், மாணவனிடமிருந்தும் பெறப்பட்ட முதற்கட்டத் தகவலின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட மாணவர்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கமைய மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பகிடிவதை மற்றும் மாணவர் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை, பல்கலைக்கழக உபவிதிகளுக்கு அமைய, கிடைக்கப்பெறும் விசாரணைக்குழுவின் பரிந்துரைகள் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் ஊடாகப் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். பேரவைத் தீர்மானத்துக்கமைய குற்றமிழைத்த மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பவம்பல்கலைக்கழகத்துக்குவெளியே இடம்பெற்றிருப்பதால் பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை வழங்கிய முறைப்பாடுகளுக்கமைய பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்குப் பல்கலைக்கழகம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் - என்றார். (அ-ம-66-125-26)

## யாழ். பல்கலை...

ணைச் செயன்முறைகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடை சட்ட நியமனங்களுக்கு அப்பாற்பட்டது என்று குறிப்பிட்டு அந்த மாணவனின் தரப்பில் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்தே, அவருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடை மீளப் பெறப்பட்டதுடன், அதன் தொடர்ச்சியாகத் தற்போது விசாரணைச் செயன்முறைகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## குளத்தில்...

ஆணின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் அழுகிய நிலையில் உள்ளமையால், அவர் சில நாள்களுக்கு முன்னரேயே உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் யார்? என்று இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-110-18)

## நிராகரிக்கப்பட்ட...

உள்ளூராட்சித் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் பல முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. அந்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகளே நேற்று இடம்பெற்றுள்ளன. இதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் நாளை இடம்பெற்று, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தீர்ப்பு வழங்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

நிராகரிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பில், கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்தில் பரிசீலனைகள் இடம்பெற்றன. இதன்போது தீர்க்கப்படாத மனுக்கள் மீதான சட்ட நடவடிக்கைகளே தற்போது இடம்பெற்றுவருகின்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நிசாம் காரியப்பர், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் ஜிப்ரி அழகரத்தினம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் ஆகியோர் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அநீதிகள்...

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் என்பது துரதிர்ஷ்டவசமானது. போர் நடைபெற்றமை தொடர்பில் நான் இன்றளவிலும் கவலைப்படுகின்றேன். 'போர் வெற்றி' என்ற வார்த்தையை எமது கட்சியினர் பயன்படுத்துவதில்லை. 'போர் முடிந்த பின்னர்' என்ற வசனத்தைத் தான் பாவிப்போம்.

இரு இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதன்போது, அவர்கள் (புலிகள்) ஏன் போராளிகளாக மாறினார்கள் என்பது தொடர்பில் நாங்கள் ஆராய வேண்டும். இதற்கு 1976ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிகளையும் நாங்கள் கருத்தில் எடுக்கவேண்டும். பல வருடங்களாக தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாகத்தான் வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். எனவே, மீண்டும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருப்பது தொடர்பிலேயே தற்போது நாம் அவதானம் செலுத்தவேண்டும். ஏற்பட்ட வடுக்களை எவ்வாறு ஆற்றுவது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தச் செயற்பாடுகளை நாங்கள் ஆரம்பித்திருக்கவேண்டும். போர் வெற்றியை கொண்டாடுவதற்கு பதிலாக, உயிரிழந்த அனைவரையும் நினைவுகூர்ந்திருக்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## யாழ் ராணி...

காலை 6 மணிக்கு சேவைகளை ஆரம்பிக்கும் யாழ் ராணி, அனுராதபுரத்தை காலை 10:30 மணியளவில் சென்றடையும். அதன் பின்னர் மாலை 2:30 மணியளவில் அனுராதபுரத்தில் இருந்து புறப்படும் சேவையானது மாலை 6:30 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும்.

அரச அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பலரின் நேர அட்டவணையுடன் தொடர்புடைய ரயில் சேவையாக இருப்பதால், அவர்களில் பலர் இந்த ரயில் சேவையைப் பயன்படுத்திவருகின்றனர். ஆனால், கடந்த ஒரு மாதமாக முன்னறிவிப்புகள் இல்லாமல் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படுவதால் பெரும் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக பயணிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். அத்துடன் ரயில் சேவைகளில் நேரதாமதங்களும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் காங்கேசன்துறை ரயில் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

வடக்கில் தற்போது ஒரேயொரு இயந்திரமே சேவையில் ஈடுபட்டுவருகின்றது. ஆதலால்தான், சேவையில் தாமதங்கள் ஏற்படுகின்றன. விரைவில் இந்தப் பிரச்சினைகள் சீர்செய்யப்படும் - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் நோன்புப் பெருநாள்

மன்னார், ஏப் 2
மன்னார் மாவட்டத்தில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை, முஸ்லிம் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பரவலாக இடம்பெற்றன. மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் புனித நோன்புப் பெருநாள் தொழுகையும் பிரசங்க மும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றன. பள்ளிவாசலின் பிரதான மௌலவி அசீம் பெருநாள் பிரசங்கத்தை நிகழ்த்தினார். (ச-41)




## கடை வாடகைக்கு


ஆரியகுளச் சந்தியில் இருந்து 50m தூரத்தில் ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

077 507 5487


## உப்புநீரில் கரையும் பிளாஸ்ரிக்

*ஜப்பான் கண்டுபிடிப்பு*

டோக்கியோ, ஏப். 2
சுற்றுச் சூழல் மாசைத் தடுப்பதற்காக உப்புத் தண்ணீரில் உடனடியாகக் கரையும் புதிய பிளாஸ்ரிக்கை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
மக்கள் அன்றாட வாழ்வில் பொருள்களை எடுத்துச்செல்ல பிளாஸ்ரிக் பைகளை அதிகம் பயன்படுத்துகின்றனர். ஆனால், இந்தப் பிளாஸ்ரிக் நீண்டகாலம் மக்காமல் இருப்பதால், இது சுற்றுச்சூழலுக்கும், வன விலங்குகளுக்கும் மற்றும் மனிதர்களுக்கும் கேடு விளைவிக்கிறது.
இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஜப்பானில் உள்ள ஆய்வு மைய விஞ்ஞானிகள் புதியவகை பிளாஸ்ரிக்கை உருவாக்கியுள்ளனர். இதைப் பயன்படுத்தும்போது உறுதியாக இருக்கும். உப்புத் தண்ணீரில் போட்டவுடன் கரைந்துவிடும். தண்ணீரில் கரைந்ததும், அது தீங்கற்ற பொருள்களாக மாறி சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)




## அமெரிக்காவின் கனவு பலிக்காது

*கிறீன்லாந்து தெரிவிப்பு*

வொஷிங்டன், ஏப். 2
அமெரிக்காவால் தங்களை வாங்க முடியாது என கிறீன்லாந்து பிரதமர் ஜென்ஸ்பிரெட்ரிக், ட்ரம்புக்கு பதிலடி கொடுத்துள்ளார்.
இது தொடர்பாக கிறீன்லாந்து பிரதமர் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:
அமெரிக்கா கிறீன்லாந்தைப் பெறும் என ஜனாதிபதி ட்ரம்ப் கூறுகிறார். நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அமெரிக்கா அதைப் பெறாது. நாம் வேறு யாருக்கும் சொந்தமானவர்கள் அல்லர். நமது எதிர்காலத்தை நாமே தீர்மானிக்கிறோம். அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்றது முதல் அண்டை நாடுகளை வரியினாலும், கருத்தாலும் தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார்- என்றார்.
இதேவேளை ஏராளமான கனிம வளங்கள் கிறீன்லாந்தில் குவிந்து கிடக்கும் நிலையில் சீனாவுக்குப் போட்டியாக இப்பகுதியைக் கைப்பற்ற உள்ளதாக ட்ரம்ப் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 'கிபிலி' ஓவியங்களால் திணறும் 'சற்.ஜி.பி.டி.'



கிபிலி பாணி ஓவியங்களால் 'சற்.ஜி.பி.டி.' சேர்வரையே நெட்டிசன்கள் திணறவைத்துள்ளனர். பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ருவிற்றர் என எங்கும் நீக்கமறப் பரவிக்கிடக்கிறது ஸ்டுடியோ கிபிலி பாணியில் சமூகவலைத்தளப் பயன்பாட்டாளர்கள் உருவாக்கிக் கொண்ட புகைப்படங்கள்.
செல்பி எடுத்து அதை கிபிலி பாணி இமேஜாக மாற்றுவது தொடங்கி வீட்டின் செல்லப்பிராணி படம் வரை இந்தப் பாணியில் மாற்றி ட்ரெண்ட் செய்துவருகின்றனர் நெட்டிசன்கள்.
இந்த நிலையில் ஏ.ஐ. தலைமை அதிகாரி சாம் ஆல்ட்மான், தனது எக்ஸ் தளப்பதிவில்,
"நீங்கள் எல்லோரும் கிபிலி படங்களை ஜெனரேட் செய்வதைக் கொஞ்சம் நிறுத்துங்கள். எங்கள் ஜி.பி.யூ.கள் உருகி வருகின்றன. அதனை சரி செய்யும் பணியில் இறங்கியுள்ளோம் எனப் பதிவிட்டுள்ளார். (ச-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 42 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை முன்பகுதி (Main Road) 200000/=, காணியின் பின்பகுதி 2ம் துண்டு 1500000/= பின்பகுதி 3ம் காணி 1 பரப்பு 100000/= ரூபா
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

தொடர்பு: 076 935 3971
076 987 8617
076 860 2770

## காணி விற்பனைக்கு

**உரும்பிராய் வடக்கில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு**

* இரண்டு பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 1 பரப்பின் விலை (1200000) பன்னிரண்டு இலட்சம் ரூபாய்.
* சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* செம்மண் நண்ணீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடி பாதை.
* உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 KM தூரம்
* உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் 1 1/2 KM தூரம்.
* தரகர் தேவையில்லை.

தொடர்பு: 076 990 3039
077 468 3354

(CS 2672) V-1

## TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

## தொழிநுட்பப் பிரிவு

# A / L 2027

- ஆரம்பம் - 05.04.2025 சனிக்கிழமை
- நேரம் - காலை 8.30 am

A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு: 077 017 5346

(cr.44674) (N-1)

## பணியாளர்கள் தேவை

பளை இத்தாவிலில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு
- சமையலாளர்
- தென்னை பராமரிப்பாளர்
- மேற்பார்வையாளர் தேவை

குறிப்பு: தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. (தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும்)
தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 326 3188


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com ...advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.